# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# O.S.No.22/2023

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 09–ஆம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியமாகிய **வா.சா.1வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.K. அனிதா, கிரேடு 1 பென்ஞ்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தேவேந்திரன் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். அதிலுள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். எனக்கும், என்அண்ணன் ஜெகதீசனுக்கும் இடையே 23.09.1991ம் தேதி ஏற்பட்ட ஒப்பந்தம் வா.சா.ஆ.1, <u>(பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)</u> **(உரிய முத்திரை கட்டணம் செலுத்தவேண்டி இருக்கும் பட்சத்தில் அதை செலுத்தியபின்னர் ஆவணத்தின் சாட்சிய தன்மையை முடிவு செய்யும் உரிமைக்குட்பட்டு ஆவணம் குறியீடுசெய்ய அனுமதிக்கப்படுகிறது.)** நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் வா.சா.ஆ.2, அதை வாலிகண்டபுரம் சார்பதிவாளர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3, பிரதிவாதிகள் பெயரிள்ள தாவா சொத்திற்கான கணினி பட்டா பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.4,

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.